முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1444

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**12.09.2023**, செவ்வாய்கிழமை

1. அறமாக வாழுகின்ற கருணைக்கடலே
அண்ணலே ஆறுமுக அரங்கனே
வரம்தந்து சுப்ரமணியர் யானும் உமக்கு
வழங்குவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் ஆவணி மாதம் 26 ம் நாள், 12.09.2023, செவ்வாய்கிழமை)
2. ஆசியதும் அரங்கன் மார்க்கம் உலகை வெல்லும்
ஆற்றல்பட அரங்கன் படைகளே இந்த உலகை ஆளும்
வாசிவென்ற ஞானியர் படைகளெல்லாம்
வணங்கி அரங்கனோடு துணையாய் நிற்க
3. நிற்கின்ற அற்புதம் நிலவுலகமெங்கும்
நிகழ்த்திடுவேன் பேராற்றலாக மாறி வருக
வருகவே வையகத்தில் அரங்கன் ஆசி பெற்றவர்கள்
வல்லமைபட உலகமெல்லாம் நிரம்பி
4. வாசிவென்ற யோக நிலைகள் அடைந்து
வள்ளலாகவே வாழுகின்ற காலமே உலக க்ஷேமத்தில் ஈடுபட்டு
ஈடுபட்டு அன்பர்கள் மூலமாக
இந்த உலகம் நல்லாட்சி காணும்
5. துன்பமான நிலைகள் அத்துனையும் அகன்று மேவி
தீவினையான ஆட்சி நிலைகளெல்லாம் ஒழிந்து
ஒழிந்துமே உலகில் ஞான ஆட்சிக்காலம்
உண்மையானவர்கள் ஆளுகின்ற மெய்ஞான ஆட்சி
6. ஆட்சியதும் அரங்கன் தொண்டர்களைக் கொண்டு
ஆறுமமுகன் யான் அகிலத்தில் நடத்துவேன்
மாட்சிமைபட பேரற்புதத்தை மக்கள் நம்புகின்ற வண்ணம்
மண்ணுலகையே ஞானவழிக்கு புரட்டி அற்புதம் படைப்பேன்

7. ஆகவே அரங்கன் வழி உலகோர் வந்தால் போதும்
அரங்கன் கொள்கை ஏற்று அதன்வழி நடந்தால் போதும்
வரங்களாக எங்கும் என் சக்தி நிரம்பி
வடிவேலன் என் ஆளுமை தலைமை வையகம் கண்டு சிறக்கும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–